# 'அரசுடன் பேச்சுவார்த்தை எதுவும் கிடையாது!'

பிரதமர் வருகையை பகிஷ்கரிப்பதில் ஆர்வமுடன் ஈடுபட்டிருக்கும் தமிழ் மக்களைத் திசைதிருப்பும் நோக்குடன், அரசுக்கும் தமிழர் கூட்டணிக்குமிடையே சமரசப் பேச்சுவார்த்தை நடப்பதாக ஈழநாடு 1.10.74 இதழிலும் வீரகேசரி 2—10—74 இதழிலும் வெளியிட்டிருந்த பொய்ச் செய்தியை தந்தை செல்வா அவர்கள் ஆணித்தரமாக மறுத்துள்ளார். மேற்படி செய்திகளில் குறிப்பிடப்பட்டதுபோல எதுவித பேச்சுவார்த்தையும் அரசுக்கும் தமிழர் கூட்டணிக்கும் நடைபெறவில்லையென்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


சுதந்திரன்
SUTANTIRAN

தொலை பேசி: 23411 | விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, புரட்டாதி 20 (6-10-74) ஞாயிறு அக். 6 றமழான் 19 புத்தகம் 28 இதழ் 6


## பாண்ட் வாத்தியம் வாசிக்க மாணவிகள் மறுப்பு!

பிரதமரை வரவேற்று 'பாண்ட்' வாத்தியம் வாசிக்க தாம் தயாராக இல்லையென உடுப்பிட்டி, வேம்படி மகளிர் கல்லூரிகளைச்சேர்ந்த தன்மானத் தமிழ் மாணவிகள் மறுத்துவிட்டனர்! வாழ்க அவர்களின் தமிழுணர்ச்சி!

# பிரதமர் வருகையை எதிர்த்து எரிமலை குமுறுகிறது!

## பாடசாலை பகிஷ்கரிப்பு; மாணவர்கள் சுறுசுறுப்பு!



தமிழ் ஈழத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் இந்த வாரம் எரிமலை குமுறுகிறது. தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழினத்தை இரண்டாந்தர நிலைக்கு தாழ்த்தியும் தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு அநீதிகளையும் அடக்குமுறைகளையும் ஏவி விட்டும் வருகின்ற சிங்கள ஏகாதிபத்திய பிற்போக்கு ஆட்சியின் தலைவியார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் யாழ்ப்பாண விஜயத்தை பூரணமாகப் பகிஷ்கரித்து தமிழ்ஈழ மக்கள் ஹர்த்தாலில் இறங்கியுள்ளனர். மிதழ் ஈழம் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்துள்ளது.

—5ம் பக்கம் பார்க்க


## ஆயுதப்படைகளால் யாழ்நகர் முற்றுகை! எங்கு நோக்கினும் காக்கிச் சட்டைகள்!

### பகைநாட்டுக்கு செல்வதுபோல பண்டா அம்மை யாழ் வருகிருர்!

சிறிமா அம்மையாரின் வருகையை முன்னிட்டு ஆயுதப் படைகளால் முற்றுகையிடப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் காட்சி தருகிறது. அங்கிங்கெனுதபடி எங்கு நோக்கினும் காக்கிச் சட்டைகளே காணப்படுகின்றன. தப்பித் தவறித் தடுக்குப் பட்டாலும் ஒரு பொலீஸ்காரன், அல்லது ஒரு இராணுவவீரன், அல்லது சி.ஐ.டி.க்காரன் மீது விழுமளவுக்கு யாழ்ப்பாண வீதி

—4-ம்பக்கம் பார்க்க

# விடுதலைப் போரில் இன்னுயிரீந்த மாவீரன் சிவகுமார் மீது ஆணை!



தமிழினத்தின் விடுதலைக்காக களபலியாக தன்னைத் தந்த ஈழத்து பகத்சிங் வீரன் சிவகுமாரன் மீது ஆணையாக—பிரதமரின்யாழ் வருகையை தமிழ் சமுதாயம் பூரணமாக பகிஷ்கரித்திட வேண்டும் என்று தமிழர் கூட்டணி தமிழ் மக்களுக்கும்வேண்டுகோள் விடுத்துள்ளது. சிவகுமாரனின் வீரத்திருமேனி உதயசூரியன் கொடி மீது சாய்ந்து கிடப்பதையும் அதைச் சுற்றி அவரது சகோதரியும் நண்பர்களும் தலைவர்களும்கண்ணீர் வடித்திடுவதையும் மேலே காண்கிறீர்கள். இந்த தியாகத்திருவிளக்கு செய்த தியாகத்தை தமிழினம் மறக்கலாமா? பிரதமரை வரவேற்று மானத்தை இழக்கலாமா?

## இளைஞர்களின் மௌன ஊர்வலம்!

தமிழ் இளைஞர் பேரவை பிரதமர் வருகையை ஆட்சேபித்து நடத்தும் மௌன ஊர்வலம் 4.10.74 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு கோட்டை முனியப்பர் கோவிலில் இருந்து ஆரம்பமாகி நல்லூர் கந்தசாமி கோவிலை வந்தடையும். இதில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பங்குபற்றுகிருர்கள்.

## ஹர்த்தாலுக்கு சண்முகதாசன் ஆதரவு!

"பிரதமர் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கத் தவறிவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் தமிழர் கூட்டணிமேற்கொண்டுள்ள காரியங்களில் நியாயம் இருக்கிறது."

சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. நா. சண்முகதாசன்—

(வீரகேசரி 30/9/74)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# ஈழத்தமிழினம் கூனி, குறுகி கும்பிட்டு வாழ முடியாது!

## பிரதமர் விஜயத்தை பகிஷ்கரிக்கும்படி தலைவர் தொண்டமான் அறைகூவல்!

"ஈழத் தமிழினம் கூனிக்குறுகி கும்பிட்டு வாழ முடியாது. தன் மானத்தையும் சுதந்திர உணர்வையும் தமிழன் கைவிடமாட்டான் என்பதை உணர்த்துமுகமாக யாழ்ப்பாணத்திற்கு பிரதமர் வரும்போது பூரண ஹர்த்தால் அனுட்டிக்க தமிழினம் முன்வரவேண்டும்!"

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவுக்கு புறப்பட்டுச்செல்வதற்குமுன்னர் சுதந்திரன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு இ. தொ. கா. தலைவர் திரு. சௌ. தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை விபரம் வருமாறு:—

"இன்றைய அரசு மக்கள் அரசு என்றும் — சோசலிச அரசும் என்றும் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளது. இன, மத பேதங்களுக்கு அப்பால் நின்று எல்லா மக்களிடையேயும் பொருளாதார சமத்துவத்தை கொண்டுவரப்பாடுபடுவதே அத்தகைய அரசின் லட்சியமாக இருக்க முடியும்.

### பட்டணப் பிரவேசம்

ஆனால் இவ்வரசு இன, மத பேதங்களுக்கு அப்பால் நின்று இந்நாட்டிலே வாழும் நாவில் ஒரு பங்கினரான தமிழின மக்களுக்கு சரிநிகர் சமானமான அந்தஸ்து வழங்க முன்வந்துள்ளதா என்று இத்தருணத்தில் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அக்கேள்விக்கு இல்லை என்ற பதில் நம் உள்ளத்திலே தோன்றுமாயின், இவ்வரசின் பிம்பமாகப்பட்டணப் பிரவேசம் செய்யவிருக்கும் பிரதமருக்கு தமிழினம் சாத்வீக பகிஷ்கரிப்பின் மூலம் தன் அதிருப்தியை, காட்டுவது சனநாயகப் பண்பாட்டுக்கு உகந்ததே ஆகும். கூனிக் குறுகி கூழைக்கும்பிடு போடுவதன் மூலம் ஒரு சமுதாயம் தன் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது.

காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் கொள்கைகளையே நாங்கள் பின்பற்றுகிறோம் என்று வாதிக்கும் இவ்வரசு பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு கொடுக்கும் மதிப்பு என்ன என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

### இரண்டாந்தரப் பிரசை

இவ்வெழில் மிகு ஈழத்தை ஒரு சுதந்திரக் குடியரசாக்குவோம் என்று சூளுரைத்து அரசியல் நிர்ணய சபை கூட்டினார்களே! என்ன ஆயிற்று? தமிழர்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட்டு, அவர்களின் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்ய வேண்டிய சூழ்நிலையில் பெரும்பான்மைப் பிரதிநிதிகளால் பிரகடனம் செய்யப்பட்ட அரசியல் சாசனம் உருவாயிற்று. அதன்படி தமிழினக் குடிமகனுக்கு தனிநபர் சுதந்திரமோ சமத்துவ அந்தஸ்தோ கிடையாது. தலைமுறையாக வாழும் தன்னருமை நாட்டிலே அவன் இரண்டாந்தர பிரசையாக ஆக்கப்பட்டுவிட்டான்.

### காங்கேசன்துறை தேர்தல்

இந்த அரசியல் சாசனத்தை தமிழினம் ஏற்காது என்பதை எடுத்துக் காட்ட, அந்தப் பிரச்சினையின் மீது மறு தேர்தலுக்கு நிற்க தயார் என்று தனது காங்கேசன்துறைப் பாராளுமன்றப் பதவியை ராஜினாமாச் செய்தார் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள். ஆனால் அரசு அந்தச் சவாலை ஏற்கவில்லை. அதன் பிறகு எத்தனையோ உபதேர்தல்களை நடத்தியுள்ளது அரசு. இந்த அலட்சியம் எதைக் காட்டுகிறது? தமிழின மக்களை நாங்கள் சரிசம அந்தஸ்தில் வைக்கத் தயாரில்லை என்று அப்பட்டமாக அறிவித்தது போல் அல்லவா தோன்றுகிறது. இந்நிலையில் பிரதமரின் யாழ். விஜயத்தைப் பகிஷ்கரிப்பது தமிழ் சமுதாயத்தின் தன்மானத்திற்குகந்த ஒரு செயலேயாகும்.

### தமிழ் மாநாடு

தமிழ் மொழி ஒரு தொன்மையான மொழி. பண்பட்ட இனிய மொழி என்று தமிழர்கள் மட்டுமல்ல அகில உலக. மொழி ஆராய்ச்சி வல்லுனர்களும் கொண்டாடுகின்ற மொழி என்பது தெரிந்ததே... முடிவாம். அப்பழம் பெரு மொழி பற்றி அம்மொழி பேசிவந்த மக்கள் பற்றி அவர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் பற்றி அதன் மூலம் மனித சமுதாய வளர்ச்சி பற்றி ஆராய அறிஞர்கள் திட்டமிட்டு வகுத்ததே தமிழாராய்ச்சி மாநாடு. அதன் முதல் மாநாடு மலேசியாவில் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் திறந்துவைக்க கோலாகலமாக நடந்தது. இரண்டாவது மாநாடு தமிழ் நாட்டில் இந்திய ஜனாதிபதி ஸாகிர் ஹுசேன் திறந்து வைக்க சிறப்புடன் நடந்தேறியது. மூன்றாவது மாநாடு ஐரோப்பியநாடாம் பிரான்சின் தலைநகரான பாரீஸில் எழிலுடன் நடந்தது.

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டை நாங்கள் நடத்துவோம் என்று ஆர்வமிக்க ஈழத் தமிழ் மக்கள் முன் வந்தனர். உலகெங்கணுமுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் அழைப்புக்கள் பறந்தன. ஆனால் ஆட்சியிலுள்ள அரசு காட்டிய மனோபாவத்தை யாரும் மறந்து விடமுடியாது.

தமிழர்கள் இந்த நாட்டிலே இரண்டாந்தரப் பிரசைகள் என்பதை அகில உலகும் அறியச்செயலாற்றியது அரசு. அவர்களின் அந்த மனோபாவத்தின் பிரதிபலிப்பால் தமிழ் ஆராய்ச்சி மாநாடு அலறித் துடிக்க கொலைக்களமாக மாறியது.

அந்த அலங்கோலம் பற்றி ஆராய மூன்று நடுநிலைமையாளர்களை மக்களே நியமித்தனர். அவர்களின் அறிக்கையின் மீது அரசு ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்



களாவது ஒரு கமிஷனை நியமித்து விசாரணை செய்து நியாயம்வழங்கவும் முன்வரவில்லை. இந்த நிகழ்ச்சி சுதந்திர இலங்கையில் தமிழின மக்களின் தாழ்ந்த நிலையை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைந்துவிட்டது.

நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் தமிழின மக்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு தமிழர்களின் ஆறு அம்சக் கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது. அக்கோரிக்கைகளைப் பற்றி கலந்து பேசக் கூட அரசு இணங்கவில்லை. இந்நிலையில் பிரதமர் யாழ். விஜயத்தை மேற்கொள்ள இருக்கிறார்.

இது ஒரு தனிநபர் கௌரவப் பிரச்சினை அல்ல. தமிழர்களின் தன்மானப் பிரச்சினை. அவர்கள் தங்களின் அவல நிலையை அறிவிக்க சாத்வீக முறையால் அன்னாரின் விஜயத்தைப் பகிஷ்கரித்து ஹர்த்தால் செய்வதைத் தவிர வேறு வழி எனக்குத் தோன்றவில்லை!!

## தமிழ் பகைவனுக்கு கொழும்பில் சிலை நிறுவியவருக்கு தமிழ் ஈழத்தில் வரவேற்பா?

இங்கேயிருப்பது என்ன தெரிகிறதா?


இந்நாட்டில் தமிழ் மொழிக்கு அற்பசொற்ப உரிமை கூடக் கொடுத்திடக்கூடாது என்று வெறிபிடித்து ஆர்ப்பாட்டம் செய்து சூடுபட்டுச் செத்த சிங்கள இனவெறியன் இரத்தினசாரதேரோவின் நினைவுச் சின்னம்!

இத்தகைய தமிழ்ப் பகைவனுக்கு — இன வெறியனுக்கு கொழும்பில் அரசாங்க செலவில் இந்த நினைவுச் சின்னத்தை நிறுவி — அரசாங்க செலவிலேயே மலரும் வெளியிட்டு மகிழ்ந்த சிங்கள ஆட்சியின் தலைவி தான் இந்த வாரம் யாழ்ப்பாணம் வருகிறார்!

தமிழ்ப் பகைவனுக்கு தன்கையால் நினைவுச் சின்னம் நிறுவிய பிரதமரையா தமிழா நீ வரவேற்கப்போகிறாய்?

வேண்டாம் தமிழா! வேண்டாம்!!

தமிழ் தாயின் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் வருவிக்காதே!



## இன அடிப்படையில் தமிழ் மாணவர்களை ஒதுக்கும் பிரதமரை வரவேற்பதா

### பிரதமர் விஜயத்தை பகிஷ்கரிக்குமாறு பெற்றோர் சங்கம் வேண்டுகோள்

யாழ் பெற்றோர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் சட்டத்தரணி திரு. சி. பொன்னையா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பொதுவாக ஒரு நாட்டுப் பிரதம மந்திரி நல்ல ஆட்சி நிலவும் முறையில் அந்நாட்டின் எப்பகுதிக்கு விஜயம் செய்யினும் மக்கள் சந்தோஷமாக வரவேற்பது வழக்கம். ஆனால், இந்நாட்டு அரசும், பிரதம மந்திரியவர்களும் தமிழ் மக்களின் உரிமைகளை அளிக்காத பட்சத்தில் தமிழ் மக்களாகிய நாம் அவரை வரவேற்று. உபசரிக்கமுடியாதிருக்கிறது. இதை மனவேதனையுடன் யாழ் பெற்றோர் சங்கம் தெரிவிக்கிறது.

கல்வித்துறையில் இந்த அரசு 1970ம் ஆண்டு ஆரம்பமாகத் தமிழ் மாணவர்களுக்கு மாறுகப் பாகுபாடு காட்டி வருகிறது. அகில உலக மனித உரிமை சாசனத்தில் வெளிறிக்கப்பட்டபடி திறமை அடிப்படையில் பல்கலைக் கழக மாணவர்களைத் தெரிவு செய்யாது, இன அடிப்படையில் இந்த அரசு தேர்வு செய்து, வருகிறது யாவருக்கும் தெரிந்ததே.

கலாசாலைப் பிரவேசப் பரீட்சை முடிவுகளை ஒரு மூடு மந்திரமாகவே இன்னும் கல்வி அமைச்சு வைத்திருக்கிறது. என்ன அடிப்படையில் தெரிவு செய்வதாக அரசு இன்னுந்தான் சொல்லவில்லை. தம் பிள்ளைகளும் மாணவர்களும் என்ன தரத்தை, புள்ளிகளை அடைந்துள்ளனர் என்று பெற்றோர்களும், பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும், அத்துடன் மாணவர்களும் அறிய விரும்பியும் அரசு அவைகளை வெளிவிடாது வைத்திருக்கிறது.

சோதனை விடைப்பத்திரங்களை தம் செலவிற் கூட திருப்பிப் பரிசோதிக்கும் உரிமையைக் கூட அரசு மறுத்து வருகிறது சோதனைகள் பரிசுத்தமில்லாது மர்மமாயிருப்பது ஜனநாயகத்துக்கு முரணான காரியம்.

மேற்காணும் விபரங்களை யாழ் பெற்றோர் சங்கமும் ஏனைய சங்கங்களும் வெளியிடும்படி கேட்டும் அரசு மறுத்துவிட்டது. இத்தகைய அரசின் பிரதிநிதியாக யாழ்ப்பாணம் வரும் பிரதம மந்திரிக்கு பெற்றோர்களும் மாணவர்களும் வரவேற்பளிப்பது பொருத்தமற்றதென யாழ் பெற்றோர் சங்கம் கருதுகிறது.

தமிழ் மொழிக்கு உரிய இடத்தை இன்னும் அரசு கொடாதிருப்பதை தயிட்டு தமிழ் மக்கள் மனம் வருந்துகிறார்கள். வட கிழக்கு மாகாணங்களில் அரச கருமங்கள் இன்னுந்தான் தமிழில் நடக்கவில்லை; தஸ்தாவேசுகளும், பதிவேடுகளும் தமிழில் வைக்கப்படுவதில்லை. நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில் பதிவுசெய்வதற்கு இன்னும் சட்டபூர்வமான ஆதாரமில்லை. தமிழில் கடிதப்போக்குவரத்துச் செய்பவர்களுடனும் சிங்களத்திலேயே பெரும்பாலும் அரசு விடை அனுப்புகிறது.

—5ம் பக்கம் பார்க்க

# எத்தனை காலம்தான் ஏமாறுவாய் தமிழா?

**அரசியல் மேடை**

அன்பு நண்பா,

சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாக தமிழ் ஈழத் தலைநகரான யாழகம் வருகை தருகின்ற பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு தங்கள் வெறுப்பையும் விரக்தியையும் எதிர்ப்பையும் இதயக் குமுறலையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில் தன்மானத் தமிழர் குலம் இவ்வாரத்துவக்கத்தில்—அக்டோபர் 6ம், 7ம், நாட்களில்—பூரண ஹர்த்தாலில் குதித்திருக்கிறது! தமிழர் சமுதாயத்துக்கு—இந்நாட்டின் ஆண்ட பரம்பரையினருக்கு—எதிராக சிங்கள அரசு செய்த—செய்து வருகின்ற கொடுமைகளையும் கொடூரங்களையும், அநீதிகளையும், அநியாயங்களையும் நீண்ட காலத்துக்கு தமிழினம் பொறுத்துக்கொண்டிராது; பொங்கியெழுந்து தமிழர் ஆட்சியை விரைவில் நிறுவியே தீரும்—என்கிற உறுதிப்பாட்டை, விடுதலை உணர்ச்சியை சிங்கள ஆட்சியின் தலைவியாருக்கு உணர்த்துகின்ற வகையில் தன்மானமிகுந்த தமிழர் சமுதாயம் வீறுகொண்டெழுந்து — கடமை கட்டுப்பாடு, கண்ணியம் ஆகிய முப்பெரும் படைக்கலங்களை ஏந்தியபடி அம்மையார் வரவை பகிஷ்கரித்து அறப்போரில் குதித்திருக்கிறது!

தமிழ் ஈழத்தில் — யாழகத்தில் — இல்லங்கள், கடைகள் தோறும் கருங்கொடிகள் அசைந்தாடிடும்; கடைகள் அடைக்கப்பட்டிருக்கும்!! தொழிசாலைகள் மூடப்பட்டிருக்கும்; படமாளிகைகள், படம் பார்த்திடச் செல்வோர் இல்லாததால் காட்சிகளின்றி மூடியிருக்கும்; பாடசாலைகள் கல்லூரிகளுக்கு செல்கின்ற மாணவசமுதாயத்தினர் அவற்றை பகிஷ்கரித்து, அம்மையாருக்கு ஆலவட்டம் வீசிடச் செல்லாது அமைதியாக வீதிகளில் இருந்திடுவர்; வீதிகள், தெருக்கள், சந்திகள் அனைத்தும் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்திடும்—இந்தக் கிழமை சிறிமா அம்மையார் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் நாட்களில்!!

காக்கிச் சட்டை அணிந்தோர், துப்பாக்கி ஏந்திய பொலிசார், இராணுவத்தினர், தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டோர், எட்டப்பர்கள், அடிவருடிகள், இளிச்சவாயர்கள், பந்தம்பிடிப்போர்—பாத பூசை செய்திடுவோர்—இப்படிப்பட்ட ஒரு கும்பலே சிறிமா அம்மையாரை வரவேற்றிட — மாலை சூடிட — தண்டனிட்டு துதித்திட — தயாராக அங்கே காத்துக்கிடக்கிறதே தவிர உடலில் ஒருசொட்டுத் தமிழ் இரத்தம் ஓடக்கூடிய எந்த ஒரு தமிழனும்—மான உணர்ச்சிகொண்ட எந்த ஒரு தமிழனும் — பிரதமரை வரவேற்றிடத் தயாராக இல்லை!

இந்நாட்டுத் தமிழினத்தாரை — பொட்டுப்பூச்சிகளாக புன்மைத் தேரைகளாக கருதி—தமிழ் சமுதாயத்தின் சுதந்திரங்களையும் உரிமைகளையும் மறுத்து கொடுமைக்கு மேல் கொடுமை புரிந்துவரும் ஆட்சியின் தலைவியை மானமுள்ள எந்த ஒரு தமிழனுமே வரவேற்கமாட்டான்! அப்படி வரவேற்பவன் மானம் கெட்டவன்! சுயமரியாதை அற்றவன்!! தமிழன் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளவே அருகதையற்றவன்!! சோற்றுத் துருத்தி—சோற்ருலடித்த பிண்டம்!!

பிரதமரை வரவேற்றுத் தெண்டனிட்டு, ஆலவட்டம் வீசி பாதபூசை செய்தால்தான் அம்மை மனங்கனிந்து தமிழர்களுக்கு 'சலுகைகள்' வழங்குவாராம்—கூறித்திரிகின்றன இந்தக் குட்டிச் சாத்தான்கள்!

நண்பா, ஒரு பக்கம் சிறிமா அம்மையாரை ஒரு பெரிய சோசலிசவாதியென்று கூறிப் பெருமையடித்துக்கொள்ளும் அதே குடிகேடர்கள்—மறுபக்கம் அம்மையாருக்கு நிலபாவாடை விரித்து மலர்தூவி அர்ச்சித்தால்தான் அம்மையாரிடம் மண்டியிட்டுச் சலுகை பெறலாம் என்றும் கூறுகின்றனர்! இது ஒரு நல்ல வேடிக்கைதான்!

ஓர் இனம் தன்னுடைய மறுக்கமுடியாத உரிமைகளைப்பெற இன்னேர் இனத்தின் தலைவரிடம் மண்டியிடவேண்டியதில்லை! அது மட்டுமன்றி — ஓர் உண்மையான சோசலிசவாதி பூஜா மனப்பான்மையை அனுமதிக்கவும் மாட்டான்; அதற்கு மயங்கவும் மாட்டான்; பூஜா மனப்பான்மையை அனுமதிப்பவனே ஆதரிப்பவனே, அதற்கு தூபம் போடுபவனே அதில் மயங்குபவனே ஓர் உண்மையான சாசலிசவர்தியாக இருந்திடமுடியாது!!

எனவே நண்பா, அம்மையாரும் அவருக்கு அர்ச்சித்து வயிறு வளர்த்திடும் கும்பலும்—அம்மையாரை வரவேற்றுப் பூசித்தால்தான் சலுகை வழங்குவார்; எதிர்த்தால் எல்லாமே கெட்டுவிடும் என்று பேசுவோரும் சோசலிச வாதிகள் அல்ல—வெறும் 'வேஷலிச' வாதிகளே!!

இத்தகைய 'வேஷலிச'வாதிகள் மத்தியிலேதான்—சிறிமா அம்மையார் தம்முடைய திக்கு விஜயத்தை நடத்துகிருர் வடக்கில்! தவிர உண்மையான தமிழ் மக்கள்—உணர்ச்சிமிக்க தமிழ் மக்கள்—சிறிமா விஜயத்தை முழுமையாக பகிஷ்கரிக்கிருர்கள் யாழ்ப்பாணத்தில்.

வளாகம் — பல்கலைக்கழகம் —திறக்கத்தானே அம்மையார் வருகிருர் யாழ்ப்பாணத்துக்கு—தமிழர்களுக்கு நன்மை செய்ய வருகின்ற அம்மை வரவை எதிர்ப்பது நீதியாகுமா என்றும் சிலர் பேசுகிருர்கள்! இப்படிக் கேட்போர் வெறும் நுனிப்புல் மேய்வோர்! ஆழமாகச் சிந்திக்கும் ஆற்றலற்ருேர்!!

தங்க நகையை தட்டிப் பறித்துவிட்டு—அதற்குப் பதிலாக 'கில்ட்' நகையை தந்தால்—''ஆகா 'கில்ட்' நகை வருகிறதே அதுபோதும் எனக்கு — போனல் போகட்டும் தங்க நகை'' என்று அறிவுபடைத்த எவனும் ஆனந்தமடைந்திடமாட்டான்! இன்றைக்குத்—'தரப்படுத்தல்' எனும் சதித்திட்டத்தின்படி, தமிழ் மாணவர்களின் உயர் கல்வி—பல்கலைக்கழக கல்வியுரிமை—வெட்டிவீழ்த்தப்பட்டிருக்கிறது—தங்க நகையைப் பறித்ததுபோல! இதைச் செய்து கொண்டுதான் ''பல்கலைக்கழக வளாகம்'' என்ற ''கில்ட் நகையை'' யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழ் மாணவர்களுக்கு தரப்போகிருராம் அம்மையார்! தங்க நகையைப் பறித்ததை மறந்துவிட்டு, 'கில்ட்' நகையில் ஏமாறும் இனமல்ல தமிழினம் என்பதை அம்மையாரும் அவரது அடிமைப் பிசாசுகளும் நிச்சயம் உணருவார்கள் இந்தக்கிழமை!

நண்பா, தமிழ் மக்கள் மத்தியிலே உரையாற்றுகின்ற சிங்களத் தலைவர்கள் அனைவரும், மறைந்த சேர் பொன். இராமநாதன், அருணசலம் போன்ற தலைவர்களை தங்கள் பேச்சுக்களில் மேற்கோள் காட்டி. ''ஆஹா, அவர்கள் அல்லவா தேசியத் தலைவர்கள்; இன்றுள்ளவர்களைப் போல அவர்கள் 'வகுப்புவாதிகள்' அல்ல; என்றெல்லாம் கூறிடுவதை ஒரு 'பாஷணை' கொண்டிருக்கிருர்கள்! யாழ்ப்பாணம் செல்லுகின்ற பிரதமர் திருமதி அம்மையாரும், அங்கு துரோகப்பரின் கடாட்சத்தால் சேர் பொன். இராமநாதனின் 'சிமெண்டு' சிலையொன்றை திறந்து வைக்கிருராம்! நிச்சயம் அவர் அங்கு சேர் பொன். இராமநாதனைப் பற்றி குடம் குடமாக கண்ணீர் வடிக்கப் போகிருர்!

எனவேதான் நண்பா, சிங்களவர்களின் உரிமைக்காக தேசிய அடிப்படையில் ஆரம்பத்தில் போராடிய சேர் பொன். இராமநாதன் அவர்கள், இறுதியில் சிங்களத் தலைவர்களால் எவ்வளவுதூரம் ஏமாற்றப்பட்டார்; அவரை எவ்வளவுதூரம் சிங்களத் தலைவர்கள் புறக்கணித்தார்கள்; ஒதுக்கினர்கள்; இகழ்ந்தார்கள்; என்பதையெல்லாம் நண்பர் ஈழவேந்தன் எழுதியுள்ள ஒரு நூலை ஆதாரமாகக் கொண்டு—உனக்கு சுட்டிக்காட்டுவது இந்நேரத்தில் மெத்த அவசியம் எனக்கருதுகிறேன்!

சிங்கள மக்களுக்கு இன உணர்வையும் மொழி உணர்வையும் 1904ம் ஆண்டிலேயே ஊட்டி—1915ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது சிங்களவர்களுக்காக இலண்டன் வரை சென்று வாதாடிய—போராடிய சேர் பொன். இராமநாதன் அதே சிங்களத் தலைவர்களால் பின்னர்—10 ஆண்டுகள் கழித்து தூற்றப்பட்டார் என்ருல் சிங்கள இனத்தின் நன்றிகெட்ட செயல் ஒருபுறமிருக்க — அதற்கான அடிப்படைக்காரணம் என்ன என்பதை தமிழ் சமுதாயம் எண்ணிப்பார்த்திடவேண்டும்!

இராமநாதன் அவர்கள் தன்னுடைய இனத்தின் உரிமைகள் சிங்களவர்களால் கபளீகரம் செய்யப்படும் என்பதை எப்போது உணர்ந்து எதிர்ப்புக் குரல் எழுப்பத் தொடங்கினேரோ — அப்போதிருந்தே நன்றி மறந்து இராமநாதனை திட்டத்தொடங்கிவிட்டார்கள் சிங்களத் தலைவர்கள்!

ஆம் நண்பா, இன்றைக்கு தமிழ் சமுதாயத்தினுடைய உரிமைகளை, கோரிநிற்கும் தமிழர் கூட்டணித் தலைவர்களை சிங்களத் தலைவர்கள் எவ்வாறு வகுப்புவாதிகள், இனவெறியர்கள் என்று பட்டம் சூட்டி பழித்துப்பேசி வருகின்றனரோ—அதே போலவே அன்றிருந்த சிங்களத் தலைவர்களும் சேர் பொன். இராமநாதனை வகுப்புவாதி—இனவெறியர் என்று தூற்றினர்— சேர் பொன். இராமநாதன் தமிழினத்துக்காக குரல்கொடுக்க ஆரம்பித்த பொழுது!

தமிழன், தன்னுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்தால்—அதற்கு 'வகுப்புவாதம்' என்று லேபலிடுவதும் அப்படி குரலெழுப்பிடுவோரை 'இன வெறியர்கள்' என்று தூற்றிடுவதும்; ஏதோ இன்று நடைபெறுகின்ற நிகழ்ச்சியல்ல இராமநாதன் காலத்திலிருந்தே சிங்களவர்கள் பின்பற்றி வருகின்ற பழைய முறையாகும்!

சிங்களவர்களின் உரிமைக்காக வாதாடிய போது—சேர் பொன். இராமநாதனை தேசியத் தலைவர் என்று தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாடிய சிங்களவர்கள்—என்று அவர் தமிழ் சமுதாயத்திற்காக குரல்கொடுத்திட தொடங்கினரா அன்று முதல் அவருக்கு வகுப்புவாதி என்று பட்டம் சூட்டி ஒதுக்கிடத் தொடங்கினர்!

சிலோன் டெயிலி நியூஸ் ஏடு தனது (14-4-1951) ஆசிரியத் தலையங்கத்தில் சேர் பொன். இராமநாதனை ஒரு பிற்போக்குவாதி வகுப்புவாதி—என்று சித்திரித்தது!

தன்னுடைய இளமைக் காலமெல்லாம்—தன்னுடைய ஆற்றலையும் சக்தியையும் சிங்களவர்களுக்காக வாதாடுவதிலேயே செலவிட்ட சேர் பொன். இராமநாதனுக்கு அவர் இறந்து 16 ஆண்டுகள் கழிந்த பின்னரே சிலை வைக்க வேண்டுமென்று சிங்கள இனம் சிந்தித்ததென்ருல்—சிங்கள மக்கள் அவர் மீது வைத்திருந்த நன்றியுணர்வு எத்தனை 'ஆழமானது' என்பதைப் புரிந்துகொண்டிடமுடியும்!

அதுமட்டுமல்ல நண்பா—இலங்கை தேசிய காங்கிரஸ் சிங்களக் காங்கிரசாக மாறுவதை உணர்ந்து மனமுடைந்து, அதிலிருந்து வெளியேறி, தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்திட 'தமிழ் லீக்' என்னும் அமைப்பை ஏற்படுத்துக்கொண்ட சேர் இராமநாதனின் இளவலாகிய சேர் அருணசலம், 1923ம் ஆண்டு நடைபெற்ற 'தமிழ் லீக்' தொடக்கவிழாவில், சேர். இராமநாதனின் சிலையை கடலில் தூக்கியெறியச் சில சிங்களத் தலைவர்கள் திட்டமிடுவதாக பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளதையும் நாம் எண்ணிப் பார்த்திடவேண்டும்!

இராமநாதன் மறைந்து 16 ஆண்டுகள் கழித்தே அவருக்கு வேண்டாவெறுப்பாக சிலை வைத்த சிங்கள இனம்—ஏன் வேண்டாவெறுப்புடன் என்று கூறுகிறேன் என்ருல் இராமநாதனின் பொதுப்பணி பற்றி அவரது சிலையின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள வசனங்கள் இவ்வளவே—''மன்னவர்; நியாயதுரந்தரர்; மைக்கேல் ஜோர்ஜ் திருத்தொண்டர்களின் தூதர்; சட்ட நிருபண சபையின் இலங்கையரின் அங்கத்தினர் பொதுசன பண உதவியால் ஸ்தாபிக்கப்பட்டது (1915)''—1923ம் ஆண்டளவில் அதே சிலையைத் தூக்கி கடலில் போட்டிட எத்தனித்த சிங்களஇனம்—இராமநாதனை வகுப்புவாதி, பிற்போக்கு வாதியென்று தூற்றிய சிங்கள இனம்—இன்றைக்கு இராமநாதனைப் போற்றுகிறதென்ருல்-இராமநாதனை 'தேசிய' வீரராகக்காட்டி தமிழர் உரிமைகோரும் இன்றைய தமிழ்த்தலைவர்களை திட்டுவதற்கேதவிர —இராமநாதன் மீது கொண்ட பாசத்தாலோ நேசத்தாலோ அல்ல என்பதை தமிழ் சமுதாயம் உணரவேண்டும்!

சேர். இராமநாதனை தேரில் வைத்துக் குதிரையாக நின்று இழுத்துச்சென்ற சிங்கள இனம்— அவரை ஏன் எதிர்த்து தூற்றத் தொடங்கியது என்பதை எண்ணிப்பார்த்திடின் சிங்களவர்களின் நச்செண்ணம் — தெற்றென விளங்கிடும் நமக்கு!

—7-ம் பக்கம் பார்க்க

## எண்ணம்

# பிரதமர் வருகையை ஏன் எதிர்க்கவேண்டும்?

ஆயிரக்கணக்கான பொலிசாரும் சி. ஐ. டியினரும், இராணுவத்தினரும் படைபட்டாளங்களும் முன்னும் பின்னும் அணிவகுத்துப் பாதுகாப்புத்தர—அடியாட்களும் தரகர்களும், எட்டப்பர்களும், எடுபிடிகளும் அடிதொழுது பின் தொடர—'காலனி' நாடொன்றை பார்வையிடச் செல்லும் ஏகாதிபத்தியத்தின் தலைவிபோல — சிங்கள ஆட்சியின் தலைவியார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா அவர்கள் இவ்வாரத் துவக்கத்தில் தமிழ் ஈழத் தலைநகரான யாழ்ப்பாணத்துக்கு 'திக்கு விஜயம்' மேற்கொள்ளுகிறார்!

தன்னை மக்கள் அரசு என்று கூறிக்கொள்ளும் ஓர் அரசின் தலைவியாருக்கு—அதுவும் தமிழ் மக்கள் இந்த அரசையே ஆதரிக்கின்றனர் என்று ஓயாமல் பிதற்றித் திரியும் பேயர் ஆட்சியின் முதல்வருக்கு—தமிழ் மக்கள் மத்தியில் செல்வதற்கு இத்தனை பாதுகாப்புக்களும் படைபட்டாளங்களும் ஏன் என்று இந்நாட்டிலுள்ள வெளிநாட்டு அரசியல் அவதானிகள் திகைக்கின்றனர்; கேலிப் புன்னகை புரிகின்றனர்!

**பிரதமர் வருகையை எதிர்த்து தன்மானத் தமிழ்க் குலம் பொங்கியெழுந்துள்ளது. கடையடைப்பு, பாடசாலை பகிஷ்கரிப்பு, ஹர்த்தால், உண்ணாவிரதம், மௌன ஊர்வலம், கறுப்புக்கொடி போன்ற சனநாயக ரீதியான எதிர்ப்பு இயக்கங்களை சாத்வீக வழியில் மேற்கொண்டு தங்கள் உள்ளக் கொதிப்பையும் விரக்தியையும் வெறுப்பையும் தமிழ் மக்கள் இவ்வாரம் பிரதமருக்கு உணர்த்தவிருக்கின்றனர்!**

ஆம்—புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டுவந்து—தமிழ் மக்களுக்கு முந்திய அரசியல் சட்டத்தில் இருந்துவந்த அற்பசொற்ப உரிமைகளைக்கூட இல்லாமல் பறித்தெடுத்து ஆண்ட தமிழ் சமுதாயத்தை இந்நாட்டில் மீளா அடிமைகளாக்கி அழித்தொழிக்க முயலும் ஆட்சியின் தலைவிக்கு—அநீதியான அரசியல் சட்டத்தை எதிர்த்து தமிழுரிமைகளைக்கோரி போராடியதற்காகத் தன்மான தமிழ்க் கொழுந்துகளை இரண்டு ஆண்டுகளாக நீதி விசாரணையின்றி சிறையில் அடைத்துவைத்து சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தும் சிங்கள ஏகாதிபத்திய வெறித்தன ஆட்சிக்கு—உலகத் தமிழ் மாநாட்டில் தமிழுயிர்களைப் பலியெடுத்து தமிழ் மகளிரை அடித்து உதைத்து மானபங்கப் படுத்திய மிலேச்சத்தன ஆட்சியின் முதல்வருக்கு—மான உணர்வுமிக்க எந்தத் தமிழன்தான் வரவேற்புத்தந்திட முடியும்!

'தரப்படுத்தல்' எனும் இன வெறிப்பாகுபாட்டு முறையை கல்வித்துறையில் புகுத்தி, தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை வெட்டி வீழ்த்தி, தமிழ் சமுதாயத்தின் கல்விக்கண்ணை குத்திக்குருடாக்கிவரும் சிங்கள இனவெறியின் மொத்த உருவமான ஆட்சியின் தலைவருக்கு எப்படி உடலில் தமிழ் குருதி ஓடும் ஒரு தமிழன் வரவேற்புத்தர முடியும்?

**எனவேதான் தன்மானத் தமிழர் குலம் — ஓர் ஆட்சியில் நடக்கும் தவறுகளுக்கும் அநீதிகளுக்கும் ஆட்சிச் சக்கரத்தைக் கையில் வைத்திருக்கும் பிரதமர் தான் பொறுப்பானவர் என்ற அடிப்படையில்—தன்னுடைய வெறுப்பையும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் பிரதமர் திருமதி சிறிமாவுக்கு இந்தவாரம் காட்டுகிறது!**

பிரதமர் வருகையை தமிழ் மக்கள் ஏன் எதிர்த்திட வேண்டும் என்பதற்கு தமிழர் கூட்டணி தகுந்த பத்துக் காரணங்களை திட்டவட்டமாக — ஆணித்தரமாக — முன் வைத்திருக்கிறது. பிரதமரை எதிர்க்கக்கூடாது, வரவேற்க வேண்டும் என்று கூறிடுவோர் எவராவது தமிழர்கூட்டணி சுட்டிக்காட்டியுள்ள பத்து காரணங்களில் ஒன்றையாவது இதுவரை மறுத்ததில்லை!

பிரதமரை வரவேற்க வேண்டுமென்பதற்கு இவர்கள் கூறும் ஒரே காரணம்—அப்படி வரவேற்றால்தான் பிரதமர் 'மனமிரங்கி' தமிழினத்துக்கு ஏதாவது சலுகைகள் வழங்குவார் என்பதேயாகும்.

இதுபோன்ற அடிமைத்தனமான—கேவலமான முறையில் யாருடைய காலிலும் விழுந்து நக்க தமிழர் சமுதாயம் தயாராக இல்லையென்பது ஒருபுறமிருக்க—இப்படிச் செய்தால்கூட அது தமிழ் சமுதாயத்துக்கு எதிர்விளைவையே உண்டாக்கும் என்பதை இச்சமயத்தில் சுட்டிக் காட்டவிரும்புகிறோம்!

**பிரதமருக்கு யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புத் தெரிவிக்காமல் — தமிழ் சமுதாயம் வரவேற்பு அளிக்குமானால்—புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற அரசின் பொய்யான வாதம் உண்மையென்றாகிவிடும்! பார்த்தீர்களா? தமிழ் மக்களுக்கு பிரச்சினையே இல்லை—அவர்களுக்கு அரசாங்கம் எல்லா உரிமைகளையும் வழங்கிவிட்டது—அதனால்தான் பிரதமருக்கு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் அமோக வரவேற்பளித்தார்கள்; வகுப்புவாதிகளாகிய தமிழர் கூட்டணிதான் குழப்பம் செய்கிறார்கள்! தமிழ் மக்கள் எங்கள் பக்கமே என்று வெளிநாடெங்கும் பொய்ப்பிரச்சாரத்தில் அரசு ஈடுபடத் தொடங்கிவிடும்!**

**அண்மையில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் பாராளுமன்ற மாநாட்டில் திரு. வி. என். நவரத்தினம் பா. உ. வின் உரைக்குப் பதில் சொல்ல வந்த அமைச்சர் பீலிக்ஸ் டயஸ்—தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்பதை அச் சர்வதேச அரங்கில் வைத்து பகிரங்கமாக ஒப்புக்கொண்டார் என்றால் அதற்குக் காரணம் தமிழர் கூட்டணியின் தலைமையில் தமிழ் மக்கள் புதிய அரசியல் சட்டத்துக்கும், அதைக்கொண்டு வந்த இன்றைய அரசுக்கும் தொடர்ச்சியாக காட்டி வரும் வலிமையான எதிர்ப்பின் விளைவுதான்! தமிழினம் தொடர்ச்சியாகக் காட்டிவரும் எதிர்ப்பே அமைச்சர் பீலிக்சை உண்மையை ஒப்புக்கொள்ளுமாறு வைத்திருக்கிறது!**

**எனவே தமிழ் சமுதாயம்—அநீதியை எதிர்த்து தொடர்ச்சியாக—விடாப்பிடியாக—சளைக்காது போராட வேண்டும்! தமிழினம் மேற்கொண்டுள்ள எதிர்ப்பியக்கத்தின் ஓர் அம்சம்—வலிமையான அம்சம்தான்—பிரதமர் விஜயத்தைப் பகிஷ்கரிப்பதாகும்!**

கெஞ்சியோ அஞ்சியோ—குழைந்தோ கூழைக்கும்பிடு போட்டோ எந்த ஒரு சமுதாயமும் சுதந்திரம் பெற்றதாக வரலாறே இல்லை! உரிமைக்குப் போராடுகின்ற சமுதாயம் ஒருபோதும் கூழைக்கும்பிடு போடாது!

எனவே தன்மானத் தமிழ்க்குலம் பிரதமர் விஜயத்தை பூரணமாக பகிஷ்கரித்து தனது ஒற்றுமையையும், உரிமை உணர்வையும் கட்டுப்பாட்டையும் ஆட்சியாளர்களுக்கும், அகிலத்துக்கும் எடுத்துக்காட்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

# தமிழ்இயக்கத்தை முறியடிப்பதே யாழ்வளாகத்தின் இரகசியம்

## தமிழ்விடுதலைஉணர்வின் விரோதிகளுக்கு பீடங்களின் தலைமைப் பதவி!

## இந்திராபாலா நியமனம் குறித்து பல்கலைக்கழக வட்டாரம் அதிர்ச்சி!

**பலத்த பொலிஸ் பந்தோபஸ்துகளுடன் யாழ்ப்பாணத்தில் பிரதமரால் இலங்கைப் பல்கலைக்கழக வளாகம் திறந்து வைக்கப்படுவதன் அடிப்படை நோக்கம் தமிழ் மக்களிடையே—குறிப்பாக தமிழ் இளைஞர்களிடையே—வேகமாக வளர்ந்து வரும் தமிழ் உணர்வையும் விடுதலை ஆவேசத்தையும் கிள்ளியெறிவதுதான் என்ற உண்மை இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.**

அரசியல் நோக்கத்துடனேயே இந்த 'தேசிய' வளாகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுகின்றதென்றும், அரசியல் அடிப்படையிலேயே அங்கு நியமனமும் நடைபெற்று வருவதாகவும் பொது மக்கள் நம்புகின்ற அளவுக்கு நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

காலாதிகாலமாக தமிழ் இயக்கங்களுக்கு எதிராக கச்சை கட்டிக்கொண்டு எதிர்ப்புத் தெரிவித்து வந்தவர்களுக்கே யாழ் வளாகத்தில் நியமனம்வழங்கப்பட்டு வருகிறது. டாக்டர் கைலாபதி, டாக்டர் இந்திரபாலா போன்றோர் தமிழ் இயக்கத்தின் எதிரிகள் என்பது தமிழ் மக்கள் ஏற்கெனவே அறிந்த ஒரு விடயமாகும்!

**மனிதப் பண்பாட்டியல் பீடத்தின் தலைவராக கலாநிதி இந்திரபாலா நியமிக்கப்பட்டிருப்பது பல்கலைக்கழக வட்டாரங்களில் பெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பீடத்தில் என்னென்ன துறைகளை ஆரம்பிக்கலாம் என்பது குறித்து பல்கலைக் கழகத்திலுள்ள மூத்த பேராசிரியர்கள், கல்விமான்கள் ஆகியோருடன் எந்தக் கட்டத்திலும் கலந்து ஆலோசிக்கப்படவில்லை யென்று அறியப்படுகிறது.**

தமிழ் இயக்கத்துக்கு எதிராக இந்தப் புதிய யாழ் வளாகம் பயன்படும் என்று கருதித்தான்போலும்— தமிழனுக்கு எந்த ஒரு சின்ன உரிமை கிடைத்தாலும் அதை எதிர்த்து வெறிக் குரல் கிளப்பும் சிங்கள இன வெறிச் சக்திகள் பல்கலைக் கழக வளாக விடயத்தில் 'கப்சிப்' என்று இருந்து வருகின்றன.

### யார் இந்த இந்திரபாலா?

யாழ் வளாகத்தில் மனிதப் பண்பாட்டியல் பீடத் தலைவராக இப்போது நியமிக்கப் பட்டுள்ள டாக்டர் இந்திரபாலாவும், ரி. கந்தையா என்பவருமாகச் சேர்ந்து 1969ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ம் திகதி அப்போதைய தேசிய உயர் கல்விச் சபைத் தலைவருக்கு 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' பற்றி ஒரு மகஜர் சமர்ப்பித்திருந்தார்கள்.

அந்த மகஜரில் தமிழர்களுக்கு தமிழ்ப் பல்கலைக் கழகம் கொடுப்பது கூடாது என்று ஆலோசனை கூறியிருந்தவர்தான் இந்த இந்திரபாலா!

● தமிழ் அரசியல் கட்சிகளே தமிழ்ப் பல்கலைக்கழக விடயத்தில் விசேட கவனம் செலுத்திவந்துள்ளன. வேறு கட்சிகள் இதுவிடயத்தில் கவனம்செலுத்தவில்லை. இந்நிலையில், தமிழ்க் கல்வியையும் தமிழ் மாணவர்களையும் தமிழ் உத்தியோகத்தர்களையும் கொண்ட தமிழ் பல்கலைக்கழகத்தை தமிழ் பிரதேசத்தில் அமைத்தால், தேசிய விரோதப் பல்கலைக் கழகமாக அது மாறிவிடும்!

● கலைப்பிரிவையும், கீழைத்தேயமொழிஆராய்ச்சியையும் கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைப்பது புத்திசாலித்தனமானது அல்ல—இதனால் தமிழ் மாணவர்களின் தரம் தாழ்ந்துவிடும். அதனால் கலைப் பிரிவுடன் கூடிய தமிழ் பல்கலைக்கழகம் தமிழர்களுக்கு தனியாகத்தேவையில்லை.

● காசி இந்துப் பல்கலைக் கழகம் போலவோ, அலிகார் பல்கலைக்கழகம் போலவோ இங்கும் மொழி மத, அடிப்படையில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால்பிரிவினையில்தான் போய்முடியும்!

இவ்வாறு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்படுவதற்கு மாறாக அன்று விஷ ஆலோசனைகள் பலவற்றைக் கூறிய இந்திரபாலாதான் யாழ் வளாகத்துக்கு மனித பண்பாட்டியல் பீடத்தலைவராக வந்திருக்கிறார்.

**இதில் வேடிக்கையென்னவென்றால் — கலைப்பிரிவைக் கொண்ட புதிய தமிழ்ப்பல்கலைக் கழகத்தை நிறுவுவது தமிழ் சமுதாயத்துக்கு தீமையானது என்றும், தமிழ் மாணவர்களின் தரத்தை குறைத்து விடுமென்றும் 1969ல் கூறிய அதே இந்திரபாலாதான் இன்றைக்கு அவரே கூறியபடி "தரங்குறைந்த" யாழ் வளாகத்தில்கலைப்பிரிவுக்கு பொறுப்பேற்று, தமிழ் மாணவர்களின் தரத்தை தாழ்த்தப் போகிறாரா என்று கேட்கின்றனர் பல்கலைக்கழக அவதானிகள்!**

### ஆயுதப்படைகளால் ...

—1-ம் பக்கத் தொடர்

**கள் எங்கும் பொலீஸ் படைகளால் நிறைக்கப்பட்டுள்ளன.**

இவ்வளவு பாதுகாப்புக்களுக்கும மத்தியில்தான்—போரில் கைப்பற்றப்பட்ட பகை நாடொன்றுக்கு முடிசூட்டிக்கொள்ளப் போகும் மகாராணி போல 'மக்கள்' பிரதமர் என்றும் 'சோசலிசவாதி' யென்றும் கூறப்படும் சிறிமாவோ அம்மையார் யாழ் நகருக்குள் காலடி எடுத்து வைக்கிறார்!

மக்கள் அரசாங்கம் என்று கூறிக்கொள்ளும் ஒரு அரசாங்கத்தின் தலைவிக்கு நாட்டின் ஒரு பகுதிக்கு செல்வதற்கு இத்தனை தொடை நடுக்கம் ஏன்? பாதுகாப்பு, பந்தோபஸ்துக்கள் ஏன்? பயந்தாங் கொள்ளித்தனம் ஏன்? இது ஒன்றே மக்களின் பலமான எதிர்ப்புணர்வை எடுத்துக் காட்டுகிறதல்லவா? என்று அரசியல் அவதானிகள் கேட்கின்றனர்.

வடக்கே குவிக்கப்பட்டுள்ள இராணுவம், பொலிசார், சி. ஐ. டி. யினர் தவிர 500 கடற்படை வீரர்களும் எந்நிலையிலும் நிலைமைகளைச் சமாளிக்கதயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்என்று கூறப்படுகிறது.

(1961ம் ஆண்டு சிறிமா அம்மையார் ஆட்சி பீடத்திலிருந்த சமயத்தில்—தமிழ் ஈழ மடங்கிலும் இரண்டு திங்களாக நடைபெற்ற அறப் போராட்டத்தின் போது — சிங்கள ஆட்சியை ஸ்தம்பிக்க வைத்தனர் தமிழ் மக்கள். அந்த அறப்போரின் போது தமிழன் கண்ட மெய் சிலிர்க்க வைத்திடும் ஒரு வீரக்காட்சியை அருகே உள் படத்திற் காணலாம்

# செந்தமிழ் கேட்க வந்து படுகொலைக்காளான தியாகிகள்மீது ஆணை!



மேலேயுள்ள பரிதாபக் காட்சியைப் பாரடா தமிழ் மகனே பார்!

கடந்த சனவரியில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ் கேட்க அளவிலா ஆர்வமுடன் வந்திருந்த தமிழர்கள்தான் இவர்கள்! நாய்கள் போல அவர்கள் வீரசிங்க மண்டபம் முன்னால் செத்துக் கிடந்திடும் பரிதாபத்தை பாரடா பார்!!

உன் கண்கள் குளமாகவில்லையா? இரத்தம் கொதித்திடவில்லையா? வேகம் பிறந்திடவில்லையா—இதனைக் காணும் போது!

இவர்கள் இறந்ததால் மாங்கல்யத்தையும், பொட்டையும் பூவையும் மஞ்சளையும் இழந்த தாய்மார்களை எண்ணிப் பார்!

இவர்கள் இறந்ததற்கு காரணஸ்தர்கள் யார்?

சிங்கள ஆட்சியாளர்கள் அல்லவா?

அத்தகைய மிலேச்சத்தனம் புரிந்து—கொடுரமிழைத்து—தமிழர்களை கொன்று குவித்திடக்காரணமாக இருந்த சிங்கள ஆட்சியின் தலைவிக்கா நீ மாலை சூடப்போகிறாய்?

வேண்டாம் தமிழா! வேண்டாம்!

பொட்டிழந்து பூவிழந்து கண்ணீர் வடித்திடும் தாய்மார்கள் மீது ஆணை!

மழலைகளைப் பறிகொடுத்து கதறிடும் அன்னையர் மீது ஆணை!!

பிரதமர் விஜயத்தை பகிஷ்கரித்து தமிழ் மானத்தைக் காப்பாற்று!!

# மாணவர் பேரவை மீதும் பொலிசார் பாய்ச்சல்!

## விடுதலை "இயக்க" நூல்கள் அபகரிப்பு!

மாணவர் பேரவையினர் மீது பொலிசார் பாய்ச்சல் நடத்திவருகின்றனர். மாணவர் பேரவைத் தலைவரின் இல்லத்துக்கு அவரைத் தேடிச்சென்ற பொலிசார் அங்கு அவரில்லாததால் அவர் இல்லத்திலிருந்த தமிழின விடுதலை இயக்கம் சம்பந்தப்பட்ட பிரசார நூல்கள் பலவற்றை அங்கிருந்து அபகரித்துச்சென்றுள்ளனர். இப்படி பொலிசாரால் அபகரிக்கப்பட்ட நூல்கள் யாவும் சட்டபூர்வமாக வெளியிடப்பட்டவையே என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர் பேரவை இயக்கத்தின் தலைவர் என்றுகூறப்படும் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த திரு. செ. செல்வக்குமாரன் என்பவரைத்தேடி பொலிசார் நடுச் சாமத்தில் அவரது வீட்டில் தேடுதல் நடத்தினார்கள். அங்கு அவரில்லாமல்போகவே அங்கு இருந்த பல புத்தகங்களை கேட்டுக்கேள்வியின்றி அபகரித்து சென்றுள்ளனர். அமரர் வன்னியசிங்கம் நினைவு மலர், தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் எழுதிய 'ஈழத்தில் இன ஒதுக்கல்' கே. எஸ். ஏ. கபூரின் 'ஒற்றை ஆட்சி ஒழிக,' காசி ஆனந்தனின் 'உயிர் தமிழுக்கு' தமிழ் எங்கள் ஆயுதம், தமிழா விழித்தெழு, ஆகிய நூல்கள் பொலிசார் எடுத்துச் சென்ற நூல்களில் சில என்று தெரிகிறது.

அத்துடன் அங்கு சேகரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திரன் பத்திரிகைகளையும் பொலிசார் தம்முடன் கொண்டு சென்றுள்ளனராம். இவையத்தனையும் சட்டத்துக்கமைய வெளியிடப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும் இந்த... இயக்கத் சேர்ந்தவர் என்று கூறப்படும் நவாலியைச்சேர்ந்த பாலேந்திரன் என்ற வாலிபரும் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளாராம்.

இன்பகுமார் எனும் மற்றோர் வாலிபரைத் தேடி பொலிசார் சென்றபோது, அவர் அங்கு இல்லாததால், அவரது தமையனைக் கைது செய்து இரண்டு நாட்கள் சிறையில் வைத்திருந்து விட்டு விடுதலை செய்தனராம்!

# பிரதமர் வருகையை....

—1-ம் பக்கத் தொடர்

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா அக்டோபர் 5ம் திகதியே யாழ்ப்பாணத்துக்கு வருகிறாரெனினும், அக்டோபர் 3ம் திகதியே பகிஷ்கரிப்புஇயக்கம்ஆரம்பமாகிவிட்டது. எங்கு பார்த்தாலும் எதிர்ப்புணர்வும், விடுதலை ஆவேசமும் கரை புரண்டோடுகிறது!

உலகத் தமிழ் மாநட்டின் இறுதிநாள் அன்று தமிழுயிர்களைப் பதை பதைக்க பலி எடுத்த சிங்களவெறித்தனத்தின் மொத்த உருவான ஆட்சிக்கு—ஆட்சியின் தலைவிக்கு வலுவான அடிப்படையில் சாத்வீகமாக எதிர்ப்புக் காட்டியே தீருவது என்று தன்மானத் தமிழ்க் குலம் உறுதிபூண்டுள்ளது.

## தமிழர் கூட்டணி பிரசாரம்

தமிழர் கூட்டணித் தலைவர்கள், தந்தை செல்வா தலைமையில் வீடு வீடாக, கடை கடையாகப் பாதயாத்திரையாகச் சென்று பிரதமர் வரவைப் பகிஷ்கரிக்கும்படியும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படியும் ஹர்த்தால் அனுட்டிக்கும்படியும் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழ்இளைஞர்பேரவையைச் சார்ந்த இளைஞர்களும் பகிஷ்கரிப்பு இயக்கத்தில் ஈட்டி முனைகளாக நின்று விறுவிறுப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

## ஒலிபெருக்கி அனுமதி மறுப்பு

தமிழர் கூட்டணித் தலைவர்கள் கடந்த பத்து நாட் நாட்களாக யாழ். மாவட்டமெங்கும் நாள் தோறும் இரண்டு மூன்று கூட்டங்களில் பிரதமரின் விஜயத்தைப் பகிஷ்கரிப்பதற்கான காரணங்களை விளக்கி தீவிர பிரச்சாரத்திலீடுபட்டிருந்தனர். கூட்டங்களுக்கு பொலிசார் ஒலிபெருக்கியை உபயோகிக்க அனுமதி மறுத்த போதிலும் — பல்லாயிரக் கணக்கான மக்கள் கூட்டங்களுக்கு வந்திருந்து தலைவர்களின் பேச்சுக்களை ஆர்வமுடன் செவிமடுத்தனர்.

## கறுப்புக் கொடி

வீடுகள்தோறும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு பிரதமர் விஜயத்தைப் பகிஷ்கரிக்கும்படியும், அக்கொடிகளை பொலிசார் அகற்றினால் அவர்களுடன் மோதாது வேறு புதிய கொடிகளை பறக்க விடும்படியும் அவர்கள் பொது மக்களிடம் கோரியுள்ளனர்.

## பகிஷ்கரிப்பு வெற்றி

அக்டோபர் 3ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நூற்றுக்கு நூறு வெற்றியடைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகள் யாவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. மாணவ, மாணவியர்கள் மத்தியில் இனவிடுதலைப் பேருணர்ச்சி காணப்படுகிறது. 5ம் திகதி பலாலி விமானநிலையத்தில் பிரதமரை வரவேற்க அணிவகுக்க வேண்டுமென்று கல்லூரி அதிபர்கள் மூலம் கல்வியதிகாரிகள் விடுத்திருந்த வேண்டுகோளை வீரன் சிவகுமாரன் வழி வந்த தமிழ் மாணவ மாணவியர் முற்றாக உதாசீனம் செய்துள்ளனர்.

இதன் காரணமாக பிரதமரை வரவேற்பதற்காக அனுராதபுரப் பாடசாலைகளிலிருந்து சிங்கள மாணவ மாணவிகளை இறக்குமதி செய்யவும் ஏற்பாடுகள் நடைபெறுவதாகசொல்லப் படுகிறது.

## பூரண ஹர்த்தால்

அக்டோபர் 5ம், 6ம் நாட்களில் கடைகள், தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்கள், படமாளிகைகள் அனைத்தும் பூட்டப்பட்டு பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப் படுகிறது.

4ம் திகதி வெள்ளிக்கிழமை காலையும், 5ம் திகதி சனிக்கிழமை காலையும் நல்லூர் கந்தசாமி கோவில் வாசலில் முறையே தமிழர் கூட்டணியினாலும், தமிழ் இளைஞர் பேரவையாலும் உண்ணாவிரதம் நடத்தப்படவுள்ளது. இவ்வுண்ணாவிரதங்களில் பெருமளவு பெண்கள் பங்குபற்றுகின்றனர்.

# கல்லூரிகள் இழுத்து மூடப்பட்டன!

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகள் சில பிரதமருக்கு பாதுகாப்பு தருவதற்காக தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொலிசாரும் இராணுவத்தினரும் தங்குவதற்கென இழுத்துமூடப்பட்டுள்ளன.

# தெற்கிலிருந்து 50 பஸ்களில் இறக்குமதி!

பிரதமரை வரவேற்பதற்கு வடக்கே நிலவும் ஆள் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக 50 பஸ்களில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்படுவார்கள் என்று மக்கள் பேசிக்கொள்கின்றனர்!

## இன அடிப்படையில்...

—2-ம் பக்கத் தொடர்

மேற்காணும் காரணங்களுக்காக தமிழ்ப்பெற்றோர்களும் மாணவர்களும் பிரதமருக்குச் சிலர் அளிக்கவிருக்கும் வரவேற்வில் கலந்து கொள்ளக் கூடாதென யாழ் பெற்றோர் சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறது. ஐப்பசி 5ம், 6ம் தேதிகளாகிய சனிக்கிழமையிலும் ஞாயிற்றுக் கிழமையிலும் நடமாட்டம் எதுவும் செய்யாது அமைதியாக தத்தம் வீடுகளிலிருக்குமாறு மாணவர்களை விசேஷமாக, இச் சங்கம் பணிவுடன் வேண்டுகிறது.

" பனைச் செல்வம் தொழிற் செல்வம் ."
15 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி
பனைமர சோபனம்
என்ற புத்தகத்தைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க் வைற் சவர்காரத் தொழிற்சாலை,
த. பெ. என் 77, யாழ்ப்பாணம்.

## சிவகுமார் என்றிடும் போதினிலே....! (10)

# தியாகத் திருநாள் - ஜுன் 5

தமிழ் மாநாட்டின் இறுதி நாளன்று நடைபெற்ற சிங்கள ஆட்சியாளர்களின் மிருகத்தனமான வெறியாட்டத்தையும் கொடூரத்தையும் குய்யோ முறையோ என்று தமிழ் பெண்கள் அவலக் குரலெழுப்பிய படி பதைபதைத்து சிதறியோடிய காட்சியையும்— கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கும் குண்டாந் தடியடிக்கும், சப்பாத்துக் கால் உதைக்கும், அப்பாவித் தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டதையும் — பத்துத் தமிழுயிர்கள் பலியாக்கப்பட்டதையும் — இன்னபிற பயங்கரக்கொடுமைகளையும் களத்தில் நின்று பார்த்தும் — அனுபவித்தும் விட்டு, நடு இரவில் வீடு திரும்பிய சிவகுமாரன் பேயறைந்தவன் போலக் காணப்பட்டான்!

உன் மத்தம் பிடித்தவன் போல அவன் தோற்றமளித்தான்!

இப்படி அஞ்சிக்கெஞ்சி, அடியும்உதையும்சூடும்பட்டு அடிமைகள் போல வாழ்வது தானு தமிழன் தலைவிதி என்று அவன் பொருமினுன்!

"திரவியம் சாப்பிட வா" என்று அழைத்தார் அன்பு அன்னை!

"சாப்பாடா! வேண்டாம் அம்மா"—சிவகுமாரன் இப்படிக் கூறினுன்!

உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிக்குப் பின்னர் 4,5 நாட்கள் சிவகுமாரன் சாப்பிடவே இல்லையாம்!

அங்கு அந்தப் பயங்கர இரவில் நடந்த பொலிசாரின் மிலேச்சத்தனமான தாக்குதலே அவன் மனக்கண் முன் நடமாடியது!

இதற்கு ஒருமுடிவு காணத்தான்வேண்டும் என்று அடிக்கடி அவன் கூறிக்கொண்டானும்!

உறங்கும்போது கூட பழிக்குப்பழி என்று அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது!

"அக்கா நான் நீண்ட காலம் இருக்கமாட்டேன்— இனத்துக்காக நான் மேற்கொள்ளும் போராட்டங்களில் எப்போது என் உயிரை அர்ப்பணிக்கவேண்டியேற்படுமோ அது எனக்கே தெரியாது! அப்படி ஒருவேளை நான் மறைந்துவிட்டாலும் —உனக்குப் பிறக்கும் மகனுக்கு — அதாவது எனது மருமகனுக்கு — வீரத்தையும் தமிழுணர்வையும், விடுதலை ஆவேசத்தையும் ஊட்டி வளர்த்து வா! உன் மாமனைப்போல நீயும் வீரனுக வளரவேண்டுமென்று அவனுக்கு சொல்! வீட்டு வாசலிலே தமிழர் கூட்டணியின் உதய சூரியன் கொடியைப் பறக்கவிடு! உன்மகனிடம் "வாழ்க ஈழத்தமிழகம்" எனும் தமிழ்தேசிய கீதத்தை இசைத்தபடி நாள்தோறும் அக்கொடியை, மும்முறை வலம் வந்து வணங்கவேண்டுமென்று எடுத்துச்சொல். ஏனெனில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் சுதந்திரத் தமிழ் ஈழத்தின் தேசியக் கொடி—ஒவ்வொரு தமிழனும் வணங்கி மரியாதை செய்யவேண்டிய கொடி — உதய சூரியன் கொடி ஒன்று தான்!

—இவ்வாறு சிவகுமாரன் தனது சகோதரியிடம் அடிக்கடி கூறுவதுண்டு.

"ஆனுல் ... அம்மாதான் பாவம்—அவவை நினைச்சாத் தான் எனக்கு கவலை. எனக்குக் கிடைத்ததுபோன்ற அம்மா வேறுயாருக்கும் கிடைக்கமுடியாது. அந்த வகையில் நான் கொடுத்து வைத்தவன்; அம்மா என்ருல் அது என் அம்மாதான்!"

இப்படித் தன்மீது கொள்ளையன்பைக் கொட்டியவன் சிவகுமாரன் என்று கூறிய போது அந்த வீரத்தாயின் கண்களில் தாய்ப்பாசம் கனிந்து கண்ணீர்த்துளிகளாக வெளி வந்தன!

"ஒரு இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக கட்டுப்பாட்டுடன் இருந்திடவேண்டும்! ஒருவர் மீது ஒருவர் ஐயம் கொள்ளக்கூடாது; எள்ளையும் ஏழாகப் பகிரவேண்டுமென்று கூறுவதுபோல— எது கிடைத்தாலும், அதை எல்லா நண்பர்களுக்கும் பகிர்ந்தளித்திடவேண்டும்!" என்று கூறுவானும் சிவகுமார்!

தனக்குக் கிடைக்கும் வசதிகளைக் கூட ஏனைய தனது நண்பர்களுக்கு கொடுத்து விட்டு, தனக்கு ஏற்படும் கஷ்டத்தை சகித்துக்கொள்ளும் பண்பு சிவகுமாரனிடம் நிறைந்திருந்தது!

சுருங்கச் சொன்னுல் — ஒரு தலைவனுக்குரிய பண்புகள் யாவும் தம்பி சிவகுமாரனிடம் இயல்பாகவே அமைந்திருந்தன!

சிவகுமாரன் வளர வளர -அந்தப்பண்புகளும் மேலும் விரிவடைந்து, தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னின்று வழிநடத்தும் தானைத் தளபதி என்னும் நிலையை சிவகுமாரன் அடைவதற்கு காலதேவனுக்கு சம்மதமில்லைப்போலும்!

இதற்கிடையில் உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாள் பொலீஸ் வெறியாட்டத்துக்கு பொறுப்பானவர் என்று கருதப்பட்ட யாழ் உதவி பொலீஸ் அதிபர் திரு. சந்திரசேகராவை கொலை செய்ய முயன்றதாக சந்தேகத்தின் பேரில் சிவகுமாரனைத் தேடி பொலிசார் அலைந்து திரியத்தொடங்கினர்! தமிழ் ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் சல்லடை போட்டு தடவி அலுத்தனர்!

வடமாகாண பொலிஸ் அதிபர் தலைமையிலே 2000 பொலிசார், யந்திரத் துப்பாக்கி, சுழல் துப்பாக்கிகளுடன் இரவிரவாகப் பல இரவுகள் உரும்பராயிலும், இன்னும் பல ஊர்களிலும் சிவகுமாரைத் தேடி வேட்டையாடித்திரிந்தனர்!

பொலிசாருக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை கொடுத்து வந்தான் வீரன் சிவகுமாரன்!

இறுதியில் சிவகுமாரனின் தலைக்கு விலைபேசினர்—சிவகுமாரனை காட்டிக்கொடுப்பவருக்கு 5000 ரூபா சன்மானம் தரப்படும் என்றும் விளம்பரப்படுத்திப்பார்த்தனர்!

முடிவில் அவர்கள் கண்டது ஏமாற்றமே!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் அழிக்க முடியாதஇடத்தைப்பெற்றுவிட்ட அந்த நாளும் வந்தது—

ஆம், ஜுன் 5—ஈழத்தமிழர்களை தாழ்த்தி அடிமைகளாக்கும் சிங்களம் மட்டும் சட்டம் வந்ததும்— அதை எதிர்த்து தமிழர்கள் அறப் போராட்டத்தில் முதன்முதலாக குதித்ததும் அந்நாளிலே தான்!

சிங்கள ஏகாதிபத்திய வெறிச்சட்டத்தை எதிர்த்து —காலிமுகத்திடலில் தமிழர்களின் குங்குமக்குருதிகொட்டப்பட்டு தியாகவரலாறு படைத்த நாள்தான் 1956 ஜுன் 5.

அது நடந்து சரியாக 18 ஆண்டுகள் கழித்து — 1974ம் ஆண்டு ஜுன் 5ம் நாள் புதிய தியாக வரலாறு ஒன்று தமிழ் ஈழத்தில் படைக்கப்பட்டது!

இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்...!

சிவகுமாரன் வீட்டு முற்றத்திலிருந்த குலைபோட்ட வாழையொன்று எதிர்பாராத முறையில் சடாரென முறிந்துவிழுந்தது!

இரத்தக்கறை படிந்த அந்த ஜுன் 5ம் நாளும் வந்தது!

மத்தியானம் ஒரு மணியிருக்கும்! சாப்பிடத்தயாராகிக்கொண்டிருந்தான் சிவகுமாரன்! கையை அலம்பிக்கொண்டு சோற்றுக்குள் கை வைத்து விட்டான்! முதலாவது கவளத்தை அள்ளி வாய்க்குள் வைக்கும் நேரம்!

திடீரென்று எழுந்தான்— "அம்மா, சில நண்பர்கள் அவசரமாகக் கூப்பிடுகிருர்கள்! அவர்களுடன் போய் விட்டு இதோ வந்துவிடுகிறேன்" இவ்வாறு கூறியபடி கையை உதறிக்கொண்டு புறப்பட்டான் சிவகுமாரன்!

சிவகுமாரன் வீட்டார் திடுக்கிட்டனர்; அன்னையின் நெஞ்சம் பதறியது—சகோதரி பதறித்துடித்தார்!

இது ஏதோ துர்க்குறி— தீமை ஏதோ வரப்போகிறதென்பதற்கு இது அறிகுறி என்று அவர்கள் கருதினர்!

சிவகுமாரனே கலகல வென்று சிரித்தான். ஒருவேளை நான்தான் சாகப் போகிறேனே தெரியாது!" என்று வழமைபோலவே கூறி சிரித்தானும் சிவகுமாரன்!

"சாப்பிட்டுவிட்டுப் போ திரவியம்" என்ருள் அன்னை!

"வந்து சாப்பிடுகிறேன் அம்மா!"—சிவகுமாரன் விடைபெற்றுப் புறப்பட்டு சென்ருன்!

அவன் இறுதியாக விடை பெறுகிருன் என்பது யாருக்குத் தெரியும்?

போனவன் உயிருடன் அந்த வீட்டுக்கு திரும்பி வரவேயில்லை! அவனுக்கென்று வைத்த அந்த உணவு ஆறி அலர்ந்து வீணுகிக்கிடந்தது!

பொலீசாருடன் நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் — யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 14ம் இலக்க வாட்டில் சிவகுமாரன் அனுமதிக்கப்பட்டிருக்கிருன்! என்ற செய்தி வந்தது!

ஆஸ்பத்திரி நோக்கி அலறியடித்துக்கொண்டு ஓடோடிச் சென்ருர் அன்னை அன்னலட்சுமி!

அதற்கு முன்னரேயே செய்தியறிந்து கொதிப்பேறிய உள்ளங்களுடன் பல்லாயிர இளைஞர்கள் ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டிருந்தார்கள்!

ஓடிச்சென்று வார்டுக்குள் நுழைய முயன்ற அன்னலட்சுமியம்மையாரை துப்பாக்கி ஏந்திய பொலீஸ்காரன் ஒருவன் தடுத்து நிறுத்தினுன்!

வீரத்திருமகன் சிவகுமாரனின் அன்னையல்லவா அந்தத் தாய்!

எங்கிருந்துதான் அவருக்கு அந்தப் பெலம் வந்ததோ— "மரணப்படுக்கையில் கிடக்கும் பிள்ளையை தாய் பார்க்கக் கூடாதென்று தடை போடுவதற்கு யாரடா நீ? என்று உறுமியபடி அந்த பொலீஸ்காரனைப் பிடித்து ஒரு புறமாகத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தார் அந்த வீரத்தாய்!

அங்கே.........!

வீரக்களை முகத்தில் இழையோட—அடுத்த சில நிமிடங்களில் தனக்கேற்படவிருக்கும் மரணத்தை பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படாது —கர்மவீரனுக தனக்கேயுரிய அந்தப்பழையபுன்னகையை சிந்தியபடி படுக்கையில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தான் வீரன் சிவக்குமார்!

செத்தபாம்பை அடிக்கும் சூராதி சூரர்கள்போல்— சிவகுமாரனை உயிருடன் கைது செய்வதற்கு முழு முயற்சி மேற்கொண்டும் படுதோல்வியடைந்து, மூக்குடைபட்ட பொலீசார்— தனக்குத்தானே நஞ்சருந்தி இன்னும் சில மணித்துளிகளில் உயிர்விடப்போகும் அந்த மான வீரனின்கைகளிலும் கால்களிலும் பெரிய சங்கிலி போட்டு கட்டிலுடன் பிணைத்திருந்தார்கள்! படுக்கையில் கிடந்தபடி அந்தச் சிங்கம் உறுமிக்கொண்டே இருந்தஅ! வெறி பிடித்த பொலிசாரை வாயில் வந்தபடி திட்டிக் கொண்டேயிருந்தான் அவன்!

தாயைக்கண்டதும் அவன் கண்கள் பனித்தன; பாசம் குமுறியெழுந்தது — அதையும் அடக்கிக்கொண்டு அவன் இப்படிக் கூறினுன் உறுதியுடன்!

"அம்மா, தமிழ்ச் சாதியின் விடுதலைக்காகத்தான் நான் போராடினேன் அம்மா! ஆனுல் அதே தமிழ் சாதியைச் சேர்ந்த துரோகியொருவனுல் தான் நான் காட்டிக் கொடுக்கப்பட்டேன்! இந்தத் தமிழ்ச் சாதி ஒரு நாய்ச் சாதி—இது ஒரு போதும் திருந்தப்போவதில்லையம்மா!

பொலிசாருக்கும் எனக்குமிடையே நடந்த போராட்டத்தில் நான் தப்பியிருப்பேன்—ஆனுல் எனது இரக்க குணத்தால் என்னையே அழிக்கும் நிலை ஏற்பட்டது. என்னைப் பிடிக்கவந்த பொலீஸ் அதிகாரி, "நான் 5 பிள்ளைக்காரன்—என்னைக் கொன்று விடாதே!" என்று கெஞ்சி

—7-ம் பக்கம் பார்க்க

## பேயனுக்கு பேர் தமிழன்!

அருவண்ணத் தமிழ் மண்ணில்
ஆரியனை முன்போர் நாள்
'வருக' என அழைத்திங்கே
வாழ்வித்த முதுதமிழன்
சுருள்வலை ஆரியனின்
சூழ்ச்சிக்கே பலியானுன்!
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர் தமிழன்!

கருநெஞ்சன் கலிங்கத்தான்
கயவன் விசயனென்பான்
வருபோதில் இலங்கை மண்
வாசல் திறந்துவிட்ட
உருகு விழல் மனத்தமிழன்
ஒளிஈழம் பறிகொடுத்தான்!
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர் தமிழன்!

அருஞாலத்திசையெல்லாம்
அங்கெல்லாம் இங்கெல்லாம்
கருகி உழைத்து வளம்
கனிவித்த உயர் தமிழன்
எருவாகிப்பிறர் வாழ்வை
எழிலாக்கித்தான் மாய்ந்தான்!
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப்பேர் தமிழன்!

திருவோங்கு பாரதம்
தெய்வமென்றும் சிங்களம்
தருசுகமே சுகமென்றும்
தனைமறந்த பெருந்தமிழன்
ஒரு நாடு தனக்கின்றி
ஊர் ஊராய் உதைபட்டான்!
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர் தமிழன்!

அருளாளன் எந்தமிழன்
அனைத்தாரும் ஊரென்ருன்!
எருமை இவனை ஒருவன்
'ஏ' கள்ளத்தோணி என்ருன்
பொருமி ஏழா இழிதமிழன்
'பொறுத்திருப்போம்' என்றுனே...
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப்பேர் தமிழன்!

காசி ஆனந்தன்

# பசப்பு வார்த்தைகளில் மயங்காது தமிழினம்! துணிச்சலுடன் உரிமைக்கு மார்தட்டி போராடும்!

—3-ம் பக்கத் தொடர்

ஆம், இன்றைக்குப் புதிய அரசியல் சட்டம் எவ்வளவு தூரம் தமிழினத்துக்கு பாதகமானது; தீமையானது; என்பதை உணர்ந்து, தமிழர்கள்—தமிழர் கூட்டணியினர்— எதிர்க்கிருேமோ— அதே போல—அன்று 1928ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டத்தை கடுமையாக எதிர்த்து வாதாடினுர் சேர். பொன் இராமநாதன். Donoughmore means Tamils no more—no due safeguards for the minorities in the Donoughmore constitution — டொனமூர் திட்டம் என்ருல் இனிமேல் தமிழர் இல்லை—சிறுபான்மை இனத்துக்கு தகுந்த பாதுகாப்பில்லை'' என்று அவர் இடிமுழக்கம் போல பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தார்!

அதே போலவேதான்—சேர். பொன் இராமநாதனின் அடிச்சுவட்டில் நின்றுதான்—தமிழர் கூட்டணி இன்றைய அரசமைப்பு தமிழர்களின் மரண சாசனம் என்று திட்டவட்டமாக எடுத்துக்கூறி அதை எதிர்த்து வருகிறது! டொனமூர் சட்டத்தை எதிர்த்ததற்காக சேர் பொன் இராமநாதனை அன்று வகுப்புவாதி என்று திட்டிய அதே சிங்கள சக்திகள் இன்றைக்கு தமிழர் கூட்டணியை—தமிழுரிமை கோருவோரை 'வகுப்புவாதிகள்' என்று திட்டிக்கொண்டிருக்கின்றன!

"யான் கிலாட்சன் பெருமகன் மிடிலோதியன் (Midlothian) தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசியதைக்கேட்டேன்! அவர் அப்போது எங்களுக்கு கூறியதாவது:- யான் ஒவ்வொரு ஆங்கிலேயனும் ஆங்கிலேயனுய் இருப்பதையும் ஒவ்வொரு ஸ்கொட்லாந்தினும் ஸ்கொடலாந்தனுயும், ஒவ்வொரு வேல்சியனும், வேல்சியனுயும் ஒவ்வொரு அயர்லாந்தனுயும் அயர்லாந்தவனுகவும் இருப்பான் என எதிர்பார்க்கிறேன்''ஒவ்வொரு தேசிய இனமும் தனக்கென சொந்தமான சில தலைவர்களைப் பெற்றிருக்கும் — இத்தலைவர்கள் குறிப்பிட்ட தேசிய இனத்தவர்களின் சார்பில் அவர்களின் இலட்சியத்தைப் பொதுவாக எடுத்துக் கூறுவர்; இல்லாவிடில் அதுபெரும் குழப்பத்திலும் மாறுபாட்டிலும் முடிவடையும்!'' என்று அன்று பாராளுமன்றத்தில் எடுத்து முழங்கிருர் சேர் இராமநாதன்—

இன்றைக்கு சேர் இராமநாதனின் சிலையைத் திறக்கின்ற ஆட்சியின் தலைவியோ — தமிழ்த்தேசிய இனத்தின் உண்மையான தலைவர்களைப் புறக்கணித்துவிட்டு—அவர்கள் இனத்தின் சார்பில் முன் வைத்துள்ள கோரிக்கைகளை உதாசீனம் செய்து ஒதுக்கிவிட்டு — தனது அடியாட்களையும், கையாட்களையும் தமிழினத்தின் செயற்கைத் தலைவர்களாக்கி தமிழ் மக்களை ஆளலாம் என்று கனவு கண்டுகொண்டிருக்கிருர்!!

அதுமட்டுமல்ல நண்பா—தமிழர் கூட்டணி இன்றைக்கு எதை எதை எதிர்க்கிறதோ அதையெல்லாம் அன்று சேர் இராமநாதனும் கடுமையாக எதிர்த்தார்! சிங்களவர்களை தமிழ் நிலத்தில் திட்டமிட்டு குடியேற்றி, தமிழர் வாழ்விடத்தைப்பறிக்கும் சூழ்ச்சித்திட்டம் 1917ம் ஆண்டே சிங்களத் தலைவர்களின் நெஞ்சத்தில் முளைவிட்டபோது, அதை கடுமையாக எதிர்த்தார் சேர் இராமநாதன்!

இந்நாட்டுக்காக உழைத்துழைத்து ஓடாகிப்போன மலையகத்தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டும் சிங்கள இனத்தின் நன்றிகெட்ட செயலை அவர் கடுமையாகச் சாடினுர்!

"இந்தியாவில் இருந்து 2500 ஆண்டுகளுக்கு முன் காற்றின் வீச்சினுல் தற்செயலாக இலங்கை வந்தடைந்த சிங்கள மக்கள் எப்படித்தோட்டத் தொழிலாளிகளைப் பார்த்து இந்தியனே வெளியேறு என்று கூற முடியும?

இவ்வாறு 1928ம் ஆண்டு பாராளுமன்றத்தில் இடிபோல ஓசை எழுப்பி முழங்கியவர் தான் சேர் இராமநாதன்! அவரது வழியில் தான் தமிழர்கள் இன்றைக்கு நடைபோட்டு வருகிருர்கள்!

"TO THE LAST BREATH OF MY LIFE, I SHALL RAISE MY VOICE AGAINST THE EXERCISE OF TYRANNY AND FOR THE SUPPRSSION OF FALSE HOOD!— என் இறுதி மூச்சுவரையும் அட்டூழியங்களையும் பொய்மையையும் எதிர்த்துக்குரல் எழுப்பத் தயங்கேன்!"— என்று டொனமூர் அரசியல் திட்டத்தை எதிர்த்து 78 வயதிலும் வீரக்குரல் எழுப்பிய சேர் இராமநாதன் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தான் இன்றைக்குத் தமிழினம் அநீதிகளையும், அக்கிரமங்களையும் கொடுமைகளையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து போராடி வருகிறது!

எனவே நண்பா, சேர் பொன் இராமநாதனைப் பற்றி பேசக்கூடியவர்கள் — அதற்கு அருகதையுடையவர்கள் — அவர் இறுதிக்காலத்தில் காட்டிச் சென்ற வழியில் தமிழர் விடுதலைக்காக போராடி வருகின்ற நாமே தவிர—பிரதமருக்கோ, அவருக்கு பாத பூசை புரிந்திடும் குமாரசூரியர் போன்ருேருக்கோ அதற்கு துளியும் உரிமை கிடையாது. தமிழ் சமுதாயத்தை ஏமாற்றும் கண்துடைப்பு வேலையே இவர்கள் இராமநாதன் சிலையை— திறப்பதும்— அவரை நினைத்து நீலிக் கண்ணீர் வடித்திடுவதும்!!

சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகள் தருவதும்—பின்னர் அவற்றைக் காற்றில் பறக்கவிட்டு தமிழ் சமுதாயத்தை ஏமாற்றுவதும் வழிவழியே வந்த வரலாறுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்ற உண்மைகளாகும்! சேர் பொன் இராமநாதன், அருணசலம் காலம் முதல் தமிழர்களை ஏமாற்றும தில்லுமுல்லு வேலைகளில் சிங்கள இனம் ஈடுபட்டிருக்கிறது! இதை அனுபவித்து உணர்ந்துதான் பிற்காலத்தில் 'தமிழா—மயங்காதே — தேசிய மயக்கில் வீழாதே'— என்று அவர்கள் அறிவுரை கூறி சென்றிருக்கிருர்கள்!

யாழகம் செல்லும் பிரதமர் தமிழர்களை ஏமாற்றிட இனிப்பாக ஏதாவது கூறக்கூடும்! வாக்குறுதிகளை வாரி வழங்கிடக்கூடும்! 1954ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த சேர் ஜோனுக்கு அடிமைகள்போல வரவேற்பளித்தார்கள் தமிழர்கள்! அவரும் அள்ளி வீசினுர் வாக்குறுதிகளை! சம அந்தஸ்து தருவேன் என்ருர்! தென்னிலங்கைக்கு திரும்பி சென்ருர்! சிங்களம் மட்டும் சட்டம் வந்தது!!

சிறிமா அம்மையாரின் கணவர், தந்தை செல்வாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தமும், காலஞ்சென்ற டட்லி சேனநாயகா — தந்தை செல்வாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தமும் —இறுதியில் என்ன ஆயின என்பது இந்நாட்டுத் தமிழ் மக்கள் அறிந்ததுதான்! எழுத்தில் செய்த ஒப்பந்தங்களையே கிழித்து வீசியவர்கள்—வெறும் வாக்குறுதிகளையா காப்பாற்றுவார்கள்? தமிழ் மக்கள் மத்தியில் மேடையில் பேசிவிட்டு இறங்கியவுடனேயே பேசியதை மறந்து விடுபவர்கள் அல்லவா இவர்கள்! எனவே இவர்கள் சிந்தவிருக்கும் மாயாஜால வார்த்தைகளில்—மயக்கு மொழிகளில் — ஏமாற்று வார்த்தைகளில் தமிழினம் எடுபடாது — ஏமாந்துவிடாது எச்சரிக்கையாக இருந்திடவேண்டும்!!

சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளில் தமிழினம் நம்பிக்கை வைக்கமுடியாது என்பதை சிங்களத் தலைவர் ஒருவரே — அதுவும் இன்றைய நிதியமைச்சர் டாக்டர் என். எம். அவர்களே 1956ம் ஆண்டு பாராளுமன்றத்தில் திட்டவட்டமாக கூறிவிட்டார்!

"இலங்கையில் ஒவ்வொரு திருப்பத்திலும் சிறுபான்மையோர் பெரும்பான்மைத் தலைவர்களால் துரோகம் இழைக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். டொனமூர் அரசியல் திட்டம் வெளிவந்த திரு. டி. எஸ். சேனநாயகாவின் காலம் தொட்டு, சிறுபான்மையோருக்கு—குறிப்பாக இந்திய வம்சாவளியினருக்கு—சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு காலப்போக்கில் அவை காற்ருேடு கலந்து பறக்கவிடப்பட்டன. மீண்டும் சோல்பரி அரசியல் உருவாகிய காலத்திலும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இறுதியில் முறியடிக்கப்பட்டன. இந்திய குடியேற்ற சட்டத்திலும் மீண்டும் மீண்டும் எத்தனையோ உறுதிமொழிகள் அளிக்கப்பட்டு நடைமுறையில் அவைகள் அனைத்தும் அவர்களுக்கு எதிராகவே அமுல் செய்யப்பட்டன. இந்நிலையில் சிறுபான்மை மக்கள் எங்கள் உறுதிமொழிகளையிட்டு எள்ளி நகையாடுவது வியப்புக்குரியதா? (பாராளுமன்றப் பதிவேடு — சிங்களம் மட்டும் சட்டம் விவாதம் —1956.

—இப்படிக்கேட்டார் அன்று வெட்ட வெளிச்சமாக டாக்டர் என். எம். பெரேரா! இன்றைக்கு நாமும் அதையே மீண்டும் கூறுகிருேம்—இதே போல தொடர்ந்து சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து ஏமாறத்தயாராக இல்லை. டொனமூர் காலத்தில் ஏமாற்றப்பட்டதுபோல — சோல்பரி காலத்தில், டி. எஸ். சேனநாயக்கா காலத்தில், சேர் ஜோன் கொத்தலாவல காலத்தில், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா காலத்தில், டட்லி சேனநாயக்கா காலத்தில் ஏமாற்றப்பட்டதுபோல— சிறிமா பண்டாரநாயக்கா, என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் காலத்திலும் தொடர்ந்து ஏமாறத் தயாரில்லை என்று நாம் கூறுகிருேம்.

எனவே சிறிமா அம்மையார் என்னதான் இனிப்பாகப் பேசினுலும், அதில் மயங்காது தமிழினம் தனது எதிர்ப்பை வலிமையுடன் காட்டியே தீரும்! இதே அம்மையார், 1961ம் ஆண்டு பிரதமராக ஆட்சியிலிருந்தபோது— வடக்கு, கிழக்கில் சிங்கள ஆட்சியே அஸ்தமித்துவிட்டது என்று அம்மையாரே பாராளுமன்றத்தில் பகிரங்கமாக கூறுகின்ற அளவுக்கு அறவழியில் வீரப்போர் நிகழ்த்திய என் தமிழ் மக்கள்—அந்த பழைய நினைவுகள் அம்மையாருக்கு வருகின்ற முறையில் — ஹர்த்தாலை வேகமுடன் நடத்தி தமிழ் சமுதாயத்தின் ஒன்றுபட்ட உரிமை உணர்ச்சியை நிச்சயம் எடுத்துக்காட்டுவர் என்பதற்கு எள்ளளவும் ஐயம் உண்டோ!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

---

## சிவகுமார் என்றிடும் போதினிலே....

—2-ம் பக்கத் தொடர்

னுன்—மன்ருடினுன்! எதிரியிடமும் இரக்கம் காட்டுவது தமிழன் பண்பு அல்லவா அம்மா?பாவமாக இருந்தது அவனைப்பார்க்க; அதனுல் அவனை கொல்வதை விடுத்து என்னை 'நான் அழித்துக் கொண்டேன் — எதிரியிடம் சரணுகதியடைவதை விட இறப்பது மேல் அல்லவா அம்மா?— பரவாயில்லை அம்மா, கவலைப்படாதே— மீண்டும் மறுபிறவி ஒன்று இருக்குமானுல், ஈழத் தமிழகத்திலேயே மீண்டும்பிறந்து, என் இலட்சியத்திற்காக போராடுவேன்!"

அழுத்தந் திருத்தமான வார்த்தைகளில் மேற்கண்ட வாருக வீரன் சிவகுமாரன் தன்னுடைய மரணப்படுக்கையில் வைத்து அன்னையிடம் கூறினுன்!

மரணம் அண்மித்துவிட்டதைப்பற்றி கவலைப்படாது எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்த சிவகுமாரனின் எஃது உள்ளம் எல்லோர் இதயத்தையும் தொட்டது!

சிவகுமாரனின் உயிர் உடலை விட்டுப்பிரிவதற்கு சில மணித்துளிகளுக்கு முன்னர்......!

தாகத்தால் துடித்துப் போனுன் சிவகுமார். இதைக் கண்ட இரக்க சிந்தனையுள்ள ஒரு ஆஸ்பத்திரி ஊழியன் ஒரு கிளாசில் தண்ணீர் கொடுத்தான்!

கிளாஸ் நீரை சிவகுமாரன் வாய்க்கு அருகில் ஆவலுடன் கொண்டு வந்தபோது —எங்கிருந்தோ பாய்ந்து வந்த இரக்கமற்ற ஒரு பொலீஸ்காரன், தன் சப்பாத்துக்கால்களால் அதைத் தட்டிவிட்டானும்!

தண்ணீர் குவளை, சிவகுமாரனின் முகத்தில் பட்டு, நெற்றியில் ஒரு காயத்தையும் ஏற்படுத்தியதாம்!

சாகும் நிலையிலிருந்த அந்த வீர சிங்கத்தை சங்கிலியால் பிணைத்து வைத்துவிட்டு தாக்கிய அந்தப் பொலீஸ்காரனின் உயர்ந்த குணமும் இரக்கபாவமும் வீரமும் வாழ்க!

சிவகுமாரன் மறைந்துவிட்டான் என்றதும்—தமிழ் ஈழம் கதறித்துடித்ததும்— இரத்தக் கண்ணீர் வடித்ததும்—வரலாறுகாணுதவகையில் இலட்சக்கணக்கில் கூடி அந்த மாவீரனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதும் தெரிந்த நிகழ்ச்சிகளே!

இந்திய சுதந்திரப்போரில் ஒரு வாஞ்சிநாதன்போல— உதம்சிங்போல — பகத்சிங் போல—தமிழ் ஈழ விடுதலைப் போரில் சிவகுமாரன் தனக்கெனத் தனியான இடத்தைப் பிடித்துவிட்டான்!

அவன் தியாகம் ஈடு சொல்ல முடியாதது — ஒப்பற்றது — மகோன்னதமானது!!

சிவகுமாரன் நாமம் இன்னும் பல்லாயிர பல்லாயிர ஆண்டுகளுக்கு தமிழர்கள் நெஞ்சில் வாழ்ந்துகொண்டிருக்கும்!

தமிழ் ஈழம் தன்னுட்சி பெறும் போது — அங்கு கௌரவிக்கப்படவிருக்கும் முதல் வரிசைத் தியாகிகளில் சிவகுமாரனுக்கு முதலிடம் உண்டு!

ஆம், சிவகுமார் என்றிடும் போதினிலே...!

புதுசக்தி பிறக்குது தமிழர் நெஞ்சினிலே......!!

விடுதலை உணர்வு பிறக்குது இதயத்திலே.........!!!

வேகம் பிறக்குது இளைஞர் உள்ளத்திலே............!!!!

வாழ்க சிவகுமாரன் நாமம்!

(முற்றும்.)

---

### இதைப் 'பனி' யென்பதா? 'பைத்தியம்' என்பதா?

"பாஷை ரீதியில் உலகில் பல்கலைக்கழகங்கள் எங்கும் இல்லை''

—ஆ. தியாகராசா
(ஈழநாடு—21-9-74)

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது,

# ஹர்த்தாலுக்கு திரளும் ஆதரவு கண்டு மிரளுகிறது சிங்கள அரசு!

பிரதமர் வருகையை எதிர்த்து 5ம், 6ம் திகதிகளின் நடைபெறும் இரண்டு நாள் ஹர்த்தாலை முறியடிக்க அரசு தனது, அதிகார பலம் அத்தனையையும் பிரயோகித்து வருகிறது.

கடைகளை மூடாது திறந்து வைத்திருக்க வேண்டுமென்றும், அப்படி மூடினுல் மூடப்படும் கடைகள் அடித்து நொருக்கப் படுமென்றும் காக்கிச் சட்டைகள் சிலரும் ஆளுங்கட்சி ரவுடிகளும் கடைக்காரர்களை பயமுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

உணவு விடுதிகளை மூடினுல், அவற்றின் பெர்மிட்டுக்களை ரத்துசெய்து விடுவதென்றும் அரசு பயமுறுத்தியுள்ளது!

உணவு விடுதிகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டால் தெற்கிலிருந்து பிரதமரை வரவேற்பதற்காக வடக்கே இறக்குமதி செய்யப்படும் ஆட்களுக்கு தண்ணீர் குடிக்கக் கூட வழியில்லாமல் போய்விடும் என்று அரசு எடுபிடிகள் அஞ்சுகிறார்களாம்!

அரசு எத்தனை தான் அடக்குமுறைகளை ஏவினுலும், பயமுறுத்தினுலும், ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்தி தமிழினத்தின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் பிரதமருக்கு காட்டியே தீருவது என்று சிவகுமாரன் மீது ஆணையிட்டு தமிழ் மக்கள் உறுதி பூண்டிருக்கிறார்கள்.

## 300 சி. ஐ. டிக்கு சாப்பாடு!

பிரதமர் யாழ் விஜயத்தை முன்னிட்டு வடக்கே அனுப்பப்பட்டுள்ள 300 சி. ஐ. டி. அதிகாரிகளுக்கு உணவு சப்ளை செய்யுமாறு காங்கேசன் துறைத் தொகுதியைச் சேர்ந்த ஒரு கிராம சேவகர் பணிக்கப்பட்டுள்ளாராம்!

## திருகோணமலை, மன்னார் வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்தும் இளைஞர் யாழ் நோக்கி படையெடுப்பு!

பிரதமரின் யாழ்ப்பாண விஜயத்தை பகிஷ்கரிக்கும் நிகழ்ச்சிகளில் தமிழ் ஈழத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பங்கு பற்றுகின்றனர். மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், வவுனியா, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் இதற்கென யாழ்ப்பாணத்தில் திரண்டுள்ளனர்.

வவுனியா-மன்னார் மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் பங்கு பற்றுவார்கள். இவர்கள் 4ம் திகதி இளைஞர் பேரவையினரால் நடாத்தப்படும் மௌன ஊர்வலத்திலும், உண்ணாவிரதத்திலும் கலந்து கொள்ளுகிறார்கள்.



திரு. பீட்டர் பொன் கலன்

மன்னார் மாவட்ட இளைஞர்கள், மன்னார் மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர்களில் ஒருவரான முருங்கன்—திரு. ஜெயராசா தலைமையில்— யாழ் நகர் சென்றுள்ளனர்.

வவுனியா மாவட்ட இளைஞர்கள், வவுனியா மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளரும், — தமிழர் கூட்டணியின் உறுப்பினரும், தமிழரசுக் கட்சி செயற்குழு உறுப்பினருமான திரு. த. ம. பீற்றர் பொன்கலன் தலைமையில் யாழ் நகர் சென்றுள்ளனர்.

அத்துடன் முருங்கன் பகுதியிலும் 3ம்-4ம் திகதிகளில் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கத் தூண்டும் முயற்சி இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10-ம் திகதி வரை
செல்லமகால்
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
-நடித்த-
நாடோடி

அக்டோபர்
11-ந் திகதி முதல்
செல்லமகால்
தியேட்டரில்
சிவாஜி, கே. ஆர்.
விஜயா, எஸ். எஸ்.
ராஜேந்திரன், நாகேஷ்
லட்சுமி, சிவகுமார், ஜோதிலட்சுமி நடித்த
கே. பாலசந்தரின்
எதிரொலி

கடைசி வாரம்
கெயிட்டி
ஜெயசங்கர், சுந்தரராஜன்,
விஜய கிரிஜா, மனோரமா,
ஸ்ரீகாந்த், தேங்காய் சீனிவாசன்,
புதுமுகம் கவிதா, ஷப்னம்
ஆகியோர் நடித்த—
தமிழ்வாணன் தரும்
காதலிக்க வாங்க
டைரக்ஷன்: ஐ.என். மூர்த்தி

3-வது வாரம்
பிளாஸா திரையில்
சிவாஜி ஜெயலலிதா, சௌகார் ஜானகி, சந்திரபாபு
-நடித்த- நீதி [ஈஸ்ட்மென் கலர்]

கிங்ஸ்லி
ஜெமினி, சரோஜாதேவி, விஜயகுமாரி, தங்கவேலு,
சரோஜா நடித்த-
ஸ்ரீதரின்
கல்யாண பரிசு

வெலிங்டன் (யாழ்நகர்)
சிவாஜி, விஜயகுமாரி, சௌகார் ஜானகி நடித்த—
பார் மகளே பார்

கடைசி வாரம்
லிடோ
(யாழ்நகர்)
ஷஷிகபூர், ராக்கி நடித்த-
சர்மிலி
கலர்
11-ம் திகதி முதல் எதிரொலி

வெகு விரைவில்
சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்
முத்துராமன், ஜெயந்தி நடித்த-
சண்முகப்பிரியா

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகா மாவத்தை த 194 வ. இலக்கத்தில் 1974ம் வருடம் ஒக்டோபர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.